**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிங்கம்புணரி**

**அசல் வழக்கு எண்: 273 /2019** வா.சா.1

2024ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 02ம் நாள் திங்கள்கிழமை வாக்குமூலம் 1857ம் ஆண்டு சட்டப்பிரிவு 10(1)(அ)ன் படி ஆணை உறுதி செய்து வைக்கப்பட்டது.

**பெயர் : பொன்னடைக்கன் தந்தை/கணவர் பெயர்: ராஜீ என்ற சுக்கரன்**

---

**02.09.2024 : 3, 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

**1. 22.02.2011ல் ஆவண எண். 534/2011 செல்லாது என்று பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் 1611/1966 பத்திரத்தின் அடிப்படையில் ஆவண எண். 534/2011 பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது சர்வே எண். 88/1 ஆகும். அதற்கான ஆவணமான ஆவண எண். 534/2011 ஆவணத்தை செல்லாது என்று பரிகாரம் கோரியுள்ளேன். நான் மாவட்ட பதிவாளரிடம் மேற்படி ஆவணம் குறித்து மனு கொடுத்துள்ளேன். மேற்படி மனு குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. வழக்கு நிலுவையில் உள்ளதால் நீதிமன்றத்தில் பரிகாரம் தேடிக்கொள்ள அறிவுறுத்தினார். 5, 6 வருடத்திற்கு முன்பாக மேற்படி ஆவணம் குறித்து தெரியவந்ததால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்றத்தில் மேற்படி ஆவணம் குறித்து தீர்வு காணும் சூழலில் அதனை நடைமுறைப்படுத்த 3, 4 பிரதிவாதிகள் தயாராக உள்ளார்கள்.**

**கு.வி. முடிவுற்றது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்குரைஞர்களுக்கு முன்பாக சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம்.ஜி.அபர்ணா
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
சிங்கம்புணரி.